71

பதிவு எண் —M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு :- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—4 குருகுலம், மாம்பாக்கம் ; நந்தன, ஆனி ; 20—6—52. தளர்—37

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## அறத்தின் பயன்

உலகத்தில் ஒருவன் சிறந்த வாழ்வடைதற்கும், துன்ப வாழ்வில் கிடந்து வருந்துவதற்கும் அவனவன் 'ஊழ்வினையே' வாயிலாக அமைகிறது. பயன் கருதாது ஒருவன் நல்ல அறச் செயல்களையே செய்துவருவானாயின், அச் செயல்களால் அவன் சிறந்த நிலைமையை மறுமையிற் பெற முடிகிறது. அறம் செய்யுங்கால் இத்துணை யறத்துக்கு இத்துணையளவு பயன் பெறலாம் என்ற எண்ணத்தோடு ஒருவன் செய்வானாயின, அவ் வெண்ணங்களே அந் நற்செயலுக்குப் பகையாக நின்று அவனைக் கெடுத்தொழிக்கும்.

சிறந்த பெருநிலையில் ஒருசிலர் வாழ்கின்றனர். பலர் அவர்க்குத் தொண்டு பூண்டு குற்றேவல் புரிந்து அவ்வளவில் மகிழ்ந்து காலங்கழிக்கின்றனர். முற்காலங்களில் பெருஞ் செல்வர்கள் சிவிகையில் ஊர்ந்து செல்வதும், அவர்க்குத் தொழும்பு பூண்டவர் சிலர் அச் சிவிகையைச் சுமந்து செல்லுதலும உண்டு. அவ் வழக்கம் இக்காலத்தில் இல்லை யெனினும், அந் நிலைமைக் கொத்த செயல்கள் செல்வர் வறியர்க் கிடையில் காணப்படுகின்றன. பொதுவில் பார்க்கும்போது இவ்விருதிறத்தார்க் கிடையில் பெருத்த மாறுபாடுகள் காணப் பெறினும், இந் நிலைகளைக் கொண்டே முன்னவர், முற் பிறவியில் நல்லறக் கடன் பூண்டவரென்றும், பின்னவர் அந் நெறியிற் பிறழ்ந்தவரென்றும் உணர்வதே மாட்சிமை யுடையது. ஆகவே அறத்தின் பயன், ஒருவனை மறுமையில் சிறந்த பெருநிலைக் குரிமையாக்கும் ஊழின் முதற் காரணமா யமைகின்றது என்று விளங்குகின்றது.

அறத்தா (று) இதுவென
வேண்டா சிவிகை
பொறுத்தானொ (டு)
ஊர்ந்தான் இடை

அறத்து ஆறு இது என வேண்டா — அறத்தின் பயன் இது வென்று யாம் ஆகம அளவை யான் உணர்த்தல் வேண்டா; சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை — சிவிகையைக் காவுவானோடு செலுத்துவானிடைக் காட்சியளவை தன்னானே உணரப்படும்.

பயனை 'ஆறு' என்றார், பின் உண்டாவதாகலின்; 'என' என்னும் எச்சத்தால் சொல்லாகிய ஆகம அளவையும், 'பொறுத்தானொடு ஊர்ந்தானிடை' என்பதனால் காட்சியளவையும் பெற்றாம். உணரப்படுமென்பது சொல்லெச்சம். இதனால் 'பொன்றாத்துணை' யாதல் தெளிவிக்கப் பட்டது.

காவுதல் — சுமத்தல். வாழ்வின் ஏற்றத்தாழ்வுகள் சென்ற பிறவியின் அறப்பயனால் அமைகின்றன என்பது கருத்து.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
4-ம் ஆண்டுக் கையொப்பம்
(5-10-51 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள் — கையொப்பம் | ரூ | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

| கிளை | நந்தன, ஆணி, | தளிர் |
|---|---|---|
| 4 | 20-6-52 வெள்ளி | 38 |

# வறியோர் கல்வி

நாட்டில் பொதுவாகக் கல்வித் திட்டம் முன்னேற்றம் அடைந்துள்ளதாகக் கருதப்படுகின்றது. நாடெங்கும் பெரும்பாலும் ஒவ்வோர் ஊர்களிலும் கல்விக் கழகங்கள் தோன்றுகின்றன. இளஞ்சிறுவர்கள் யாவரும் படித்துக் கல்வி அறிவுடையவராகத் திகழ்தற்கான எல்லாத் திட்டங்களும் அரசியலாரால் அவ்வப்போது உடனுக்குடன் வகுக்கப்பட்டு நடைமுறையில் கொணரப்பட்டன. ஆனால் இத்தகைய ஏற்பாடுகளால் கல்விச் சீர்திருத்தம் நாட்டில் ஏற்பட்டதா? மேனாடுகளிற் போல நூற்றுக்கு நூறென்னும் அளவில் மக்கள் கல்வியறிவு பெறாவிடினும், அதிற்பாதியாவது பெற்றாரென்று சொல்ல இயலுமா?

இத்தகைய வினாக்களுக்கு அண்மையில் 1951ல் நடைபெற்ற மக்கள் கணக்கெடுப்பே (**Census**) தக்க விடை பகன்றது. சென்ற பத்தாண்டுகட்கு முன்னர் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் மக்கள் கல்வி நிலை கண்டதற்கு மேலாக, நம் உள்ளத்தில் மகிழ்ச்சியளிக்கும் அளவில் மக்கள் கல்வி நிலை உயர்ந்ததாக அண்மைக்காலக் கணக்கெடுப்பு அறிவிக்கவில்லை. ஆட்சியினர் எடுத்துக் கொண்ட பெரு முயற்சிகளால் தக்க பயன் பெற்றதாகவும் தெரியவில்லை. உடனுக்குடன் அமைத்த திட்டங்களால் நாட்டில் கல்வி பெருகாமற் போனதற் கென்ன காரணம்?

கல்வித் திட்டங்களால் நாட்டில் பயனே விளையாமற் போகவில்லை. ஆனால் ஒரு சாராருக்கு மட்டும், மக்கள் எண்ணிக்கையிற் சிறு பான்மையிருக்கு மட்டும் அத்திட்டங்கள் பயன்பட்டன. வளமிக்க செல்வர் குடியினரும், அரசியல், வணிகத்துறைகளில் பெரும்பதிப் புள்ளவரும், திங்கள் தோறும் பேரளவான ஊதியம் பெறும் அலுவலாளர்களும் இத் திட்டங்களால் முன்னர்த் தாம் எய்தியிருந்த நலன்களுக்கும் மேலாகப் பின்னும் பல்வகை நலன்கள் கிடைக்கப் பெற்றனர். படிப்பறிவில் தொன்று தொட்டு வரும் குடும்பங்களே பின்னரும் அவ் வறிவு மிகுதியாகப் பெற முடிந்தது. ஏனையோர் கல்வி யறிவு பெற முயன்றது 'முடவன் கொம்புத் தேனுக்கு முயன்றதை' யே ஒத்தது.

நம் நாடு ஏழைகள் நிரம்பிய நாடு. பெரும்பாலும் உழு தொழிலாளர்களும், ஏழைக் கூலிகளும், செல்வர்பாற் குற்றேவல் புரிவோருமாகவே மக்கள் உள்ளனர். பலர் அரசியல் அலுவற் கழகங்களில் தாழ்ந்த ஊதியத்துக்கு வேலை பார்க்கும் அலுவலர்கள். மற்றும் பலர் பள்ளி ஆசிரியர்கள். இவர்களுடைய வாழ்நாட் காலத்தில் உயர்வென்பதும் தாழ்வென்பதும் கிடையாது. அவரவர்களுடைய பற்றுவருவாய் நிலை, என்றும் ஒரு படித்தாகவே இருந்து வருகிறது. ஏழைக் குடியானவன் மகன் சூழ் நிலைகளின் பயனாகத் தன் தந்தை வாழ்ந்த நிலைக்கும் சற்றுத் தாழ்வாகவே வாழ்கிறான். ஆனால் முயற்சிகளில் மட்டும் குறைவில்லை. கூலியாட்களின் மக்கள் கூலி யாட்களாகத் தான் ஆக முடிகிறது. அரசியல் அலுவற்கழகங்களில் தாழ்ந்த ஊதியம் பெறுபவர்களும் தொடக்க நிலைப்பள்ளி ஆசிரியர்களும் இவ்வாறே தாழ்ந்த வாழ்விலேயே காலந் தள்ளுகிறார்கள். இவர்கள் வருவாயின் அமைப்பு உணவுக்கும் உடைக்குமே காணா நிலையில் மக்களைக் கல்வி பயிற்றுவதற்கு எங்ஙனம் சாலும்? ஆகவே இவர்களின் மக்கள் இவர் தம் தகுதியையும் எட்டிப் பார்க்க முடிவதில்லை.

அமெரிக்கா முதலிய நாடுகளில் கூலிவேலை செய்வோன் மகன், தன் அறிவின் முயற்சியால் நபேர் னென்னு மளவுக் குப் பெருஞ் செல்வனாக முடிகிறது. புக்கர் வாஷிங்டன், ஆபிரகாம் லிங்கன் போன்ற பெருமக்கள் செல்வர் குடிகளில் தோன்றியவரல்லர். மிக வறிய குடும்பங்களில் தோன்றி முயன்று கல்வி கற்று முன்னுக்கு வந்தவர். வறியவரும்

கல்வி கற்கும் அளவுக்கு அந் நாட்டுக் கல்வித் திட்டங்கள் செயலாற்றின. நாம் கேள்விப் பட்ட அளவில் மேனாடுகளில் கூலி வேலை செய்வோர்க்கென நாளிதழ் கிழமை இதழ்கள் உண்டெனவும் அம் மக்களுக்கென்று கழகங்களும் நிதியமைப்புக் களும் உள்ளன வென்றும் தோன்றுகின்றது. இவ்வளவுக்கும் காரணம் வறியோர்க்கும் வழிகாட்டும் அந் நாட்டுக் கல்வித் திட்டங்களே யாகும்.

இந் நாட்டில் ஏழைகள் என்ன தான் முயன்றாலும் போதுமளவு கல்வி பெறும் வழி யில்லை. அப்படி ஒரு சிலர் பெரு முயற்சி எடுத்துக் கொண்டாலும் தொடக்க நிலைப் பள்ளியில் ஐந்தாவது வகுப்புப் படித்து முடிப்பது ஒரு பெரிய செயலாக முடிகிறது, உயர்நிலைப் பள்ளியிற் கல்வி பயிலுதல் இவர்களில் மிகப் பெரும் பாலோர்க்கு எட்டாத செயல். உண்ணவும் உடுக்கவுமே இவர்கள் ஊதியம் பற்றாத நிலையில் குழந்தைகளுக்கு உயர்நிலைப் பள்ளியில் மாதச் சம்பளம் செலுத்திக் கல்வி பயிற்றுவிக்க எங்ஙனம் கூடும். ஆகவே இவர்களில் பெரும்பாலோர் கல்வியறிவு பெறுமற் போவது வியப்பில்லை யல்லவா.

இதற்கெல்லாம் முடிவு தோன்றாதா? ஏழை மக்களும் உயர் நிலைப் பள்ளிப் படிப்புப் பெற வழி உண்டாகாதா? என்று நம் அனைவர்க்கும் ஒரெண்ணம் இருந்து வந்தது. இறைவன் திருவருளால் அவ் வெண்ணம் நிறைவெய்தும் நேரம் வந்து விட்டது. இப்போழ்து, சென்னை ஆட்சிப் பொறுப்பினர் அரசாங்க அலுவற் சாலைகளில் அலுவலாற்றும் குறைந்த ஊதியம் பெறும் முழுநேர அலுவலாளர், ஆரம்ப ஆசிரியர் ஆகிய இவர்களின் குழந்தைகளுக்கு உயர் நிலைப் பள்ளியிற் கல்வி பயிலத்தக்க சிறந்த வாயில்கள் உவந்தளித்துள்ளனர். அவற்றின் படி இனி உயர்நிலைப் பள்ளிகளில் கல்வி பயிலும், ஆசியல் விளம்பரப் பதிவில்லாத அலுவலாளர் (**Non-Gazetted Officers**) ஆரம்ப ஆசிரியர் ஆகியோரின் குழந்தைகள் உயர் நிலைப்பள்ளிகளில் 1 முதல் 3 வது படிவம் வரையில் சம்பளமின்றியும் அதற்குப் பின் 4 வது முதல் 6 வது படிவம் (**S S L C.**) வரையில் அரைச் சம்பளத்தோடும் கல்வி பயில வழி ஏற்பட்டுவிட்டது.

ஏழைகள் என்று கருதப்படும் மக்களில் ஒரு சாராருக்கு இவ் வுதவி இவ் வகையில் மிக்க பயன் படுகின்றது. இனி பழைய இழி வழக்குகள் தவிர்ந்து, அரசியல் ஊழியர்களின் மக்களும் கல்வி யறிவினால் உயர் நிலை அடையலாம். ஆரம்ப ஆசிரியரின் குழந்தைகளும் உயர்நிலைப் பள்ளிப் படிப்பினை ஒருவாறு பெறுதல் கூடும்.

இத் திட்டம் கிராம உத்தியோகத்தர்களுக்கு அறவே நீக்கப் பட்டிருத்தலின் நோக்கம் இஃதெனத் தோன்றவில்லை. இவர்கள் பெயரளவுக்குக் குறை நேர அலுவலாளர்களாகக் கருதப்பட்டாலும், உண்மையில் முழு நேர அலுவலாளர்கள் என்போரைக் காட்டிலும் பொறுப்பு மிக்கதும் ஓய்வு தாராததுமான பணிகளில் நீடுநின்று உழைக்கின்றனர் என்பது சிறிது உற்று ஆராய்வார்க்குப் புலனாகும். நாட்டின் பெருநலன்கள் யாவும் கிராமச் சீர்திருத்தத்தினின்றுதான் பெருகி யோங்குகின்றன என்று ஓய்வின்றி மொழிந்தும் எழுதியும் வரும் ஆட்சிப்பெருமக்களை அக் கிராம உத்தியோகத்தர் பரம்பரை மட்டும் வழிவழியே நிரம்பாத கல்வியுடையவராகவே இருத்தல் வேண்டும் என்ற தவறான கருத்து எங்ஙனம் ஆட்கொண்டு விட்டதோ அறிய முடியவில்லை!

கிராம உத்தியோகத்தர்களின் மக்கள், உயர்ந்த கல்வியறிவு பெற்றால், அதற்கேற்ப ஆட்சியின் தகுதி உயரும் என்பது கூர்ந்துகவனிப்பார்க்குவிளங்கும். இஃது ஔவையின் 'வரப்புயர' என்ற வாழ்த்துரை போன்று, பெருகிய செல்களுக் கெல்லாம் அடிப்படையான நற் செயலைக் குறிப்பதாகும்.

ஏழை மக்களில் ஒருசார்க்கு ஒருவாறாக, உதவ முன் வந்த ஆட்சியினர், மேற்கூறிய கருத்தினை அருட்பண்போடு சீர்தூக்கிக் கவனித்து ஆவன செய்ய இறைவன் அருள் வானாக.

# * நிலவுக்கு - - - - *

[ஏமாற்றம்]

இன்முக ஒளியே!

என்னுடைய கருத்துக் களுக்கு புகழுரை தந்திருக்கின்றாய். தற்போது, மணமான பிறகுதான் "அன்பின் வாழ்வு" அரும்புகிறது என்பதை ஆதாரங்களோடு எடுத்தியம்பி யிருக்கின்றாய். கண்டவுடன் ஏற்படும் நிலைக்குக் "காதல்" என்ற பெயர் பொருந்தாது, என்பதை திருத்தயான முறையில் எழுதியிருக்கின்றாய். "காதல் அறிவின்பாற் பட்டது" என்னும் ஓர் ஆங்கிலக் கவியின் கருத்து உன் கடிதத்தில் தெள்ளென விளங்குகிறது.

அன்று மாலை, கலாசாலையிலிருந்து வந்ததும், வராததுமாக, "நல்ல உடைகளை அணிந்து கொள் இள நகை" என்று தாத்தா என்னைப் பார்த்துக் கூறினார். "வேளைக்கு ஒரு உடை மாற்றிக் கொள்கிறாயே! நாட்டில் உடை மிகக் குறைவு உண்டாகும் போலிருக்கிறதே" என்று என்னைப் பார்த்து அன்பாகக் கடிந்து கொள்ளும் தாத்தா அவ்வாறு கூறியது எனக்கு வியப்பைத்தான் கொடுத்தது.

"வேலனில் வரப்போகிறான். வீணாக நேரத்தைப் போக்காதே பட்டுப் புடவையைக் கட்டிக் கொள்; காற்றிலே பறக்கும் தலை மயிரைக் கோதி இரண்டு பின்னல்கள் போட்டுக்கொள் என்றெல்லாம் பேச்சை அடுக்கிக் கொண்டே போனார் தாத்தா.

என் மனத்திடத்தே கோபமும் சிரிப்பும் மாறி மாறி இடம் பிடித்தன.

தோழி! நீ என் உள்ளமடி. என் உள்ளத்திற்கு நான் நினைக்கும் நல்லதும், பொல்லாததும் நன்கு தெரியும்.

உனக்கு என் எண்ணங்களை எழுத்தின் மூலமாக எடுத்தியம்பியிருக்கின்றேன். உள்ளம் என் உடல் இவ் வுலகினின்று பிரியும் வரை என்னைவிட்டகலாது. எனக்கும் உனக்கும் உள்ள நட்பின் தகைமையும் அவ்வாறு தான் இருக்கும் என எண்ணுகின்றேன். அதனால் என் உள்ளத்தின் உணர்ச்சிகளை எழுத்தின் வாயிலாக அறிவிக்க முயற்சிக்கின்றேன்.

"திருமணம்" வரவர வியாபார முறையாக மாறி வருகிறது. நேரிடையாகப் பார்த்து நெஞ்சம் அறிவிப்பேன் என்று சொல்வார். மணத்துக் குரிய வயதை உடைய பெண்கள் இருக்கும் வீடுகளுக்குச் செல்வார். வகை வகையாக வழங்கப்படும் சிற்றுண்டிகளைச் சிறிதும் மிச்சப் படுத்தாமல் கச்சிதமாக உண்பார். நகை என்னென்ன போடுகிறீர்கள்? என்று கேட்பார். சென்று கடிதம் எழுதுகிறேன் என்று சொல்வார். சென்ற பிறகு தற்போது "மன்றல மகன் விரும்பவில்லை" என்று கடிதம் வரும். இத்தகைய எத்தர்கள் கூட்டமும் அவர்களால் ஏமாற்றத்திற்கு உட்படுத்தும் படும ஏமாளிகளின் கூட்டமும் நாட்டில் நிறைந்து வருகின்றன.

என் இரட்டைப் பின்னலையும் பட்டுப் புடவையையும் பார்த்தா ஒருவன் மணக்க விரும்புவான். என்றும் இருக்கும் நிலையில் நான் அழகாக இல்லை போலும்! எனக்கே என்னைப் பற்றிச் சந்தேகம் வந்துவிடுகிறதடீ.

தாயும், தந்தையும் இறந்ததிலிருந்து என்னை "அன்னை அன்பு" கொண்டு ஆதரித்து

நஞ்சன் கூடுபல்பொடி

பாக்டெரியாரின்

நம்பிக்கை பெற்ற
ஆயுர்வேத உதவிகள்



காஸ்மஸ்
கஸ்தூரி மாத்திரை
கர்ஜன்
கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ்
பேதியாக மாத்திரை
சிசுராக் குழந்தை டானிக்
பிமலெக்ஸ் டானிக்
யூடினல்
கர்பிணிகளுக்கு
டோனடெல்
பிரஸவமானபின் டானிக்



ஹிஸ்மெனோ டானிக்
பிரதமென்ஸ்
சூதக கோளாறுகளுக்கு

யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1

வருகிறார் தாத்தா. அவர் கூறியதை எதிர்த்துக் கூற அப்போது எனக்கு மனம் வரவில்லை.

“அன்னையையே அறிந்திராத நீ அன்னையின் அன்பை எப்படியறிவாய்” என்று நினைக்கத்தான் தோன்றும்.

பக்கத்து வீட்டுப் பாலுவின் குழந்தைக்கு நான்கு நாட்களாகக் காய்ச்சல். தன் நினைப்புத் தவறிய நிலை. எப்போதும் அக் குழந்தையின் பக்கத்திலேயே தாய் உட்கார்ந்திருக்கிறாள், உணவும் உட்கொள்ளுவதில்லை. அக் குழந்தைக்கு வேண்டுவதைச் செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறாள். அடிக்கடி கண்ணீர் விடுகிறாள். கடவுளை வேண்டுகிறாள். இதை நான் நேரில் பார்த்தேன். ஒரு அன்னையின் “களங்கமில்லா” அன்பை அறிந்து கொண்டேன்.

தாத்தாவிடம் முன்னாள் மாணவனுக்கு விருந்த வேனிலுக்கு இத்தனை ஆடம்பர வரவேற்பா? எனக்குச் சிறிது கூடப் பிடிக்கவில்லை.

மாணவன் மரியாதை காட்ட வேண்டுமா? ஆசிரியர் மரியாதை காட்ட வேண்டுமா? காலமே இப்போது மாறிக் கொண்டுதானடி வருகிறது.

இதை நான் தாத்தாவிடம் கேட்டதற்கு “மரியாதை” சூழ்நிலையை ஒட்டி அமைவது; நீ ஒன்றும் அறிய மாட்டாய்; சிறு பெண் என்றெல்லாம் கூறினார்.

செயற்கை அன்பு என் அழகைப் பன் மடங்காக உயர்த்திக் காண்பிக்கின்றதாம். இது என் தாத்தாவின் கூற்று.

சில சமயங்களில் மனிதனுடைய நிலை பேச்சு இவை எல்லாம் மாறுகிறது — இல்லை — மாற்றப்படுகிறது என்பதற்கு இது சிறந்த சான்று என்று கூடக் கூறலாம்.

கழுத்திலே மணி அணிவார்கள்; உடம்பை நன்றாகத் தண்ணீர் கொண்டு கழுவுவார்கள்; கொம்புகளுக்கு வர்ணம் பூசுவார்கள்; சலங்கைக் கயிறு புதிதாகப் போட்டிருப்பார்கள், சந்தைக்கு அழைத்துச் செல்வார்கள்; மாட்டை அதிக விலைக்கு விற்றுவிட எண்ணங் கொண்டவர்கள்.

அங்ஙனமே நானும் நன்றாக முகம் அலம்பினேன்; முகத்திலே மாவைப் பூசிக் கொண்டேன்; பெட்டியில் பத்திரமாக இருந்தது இறந்த அம்மாவின் பொன் சங்கிலி. அதை அணிந்து கொண்டேன். பட்டுப் புடவையைக் கட்டிக் கொண்டேன். இரட்டைப் பின்னல் போட்டுக் கொண்டேன். நெற்றியில் வட்டமாக சாந்தை இட்டுக் கொண்டேன்.

சந்தைக்குச் செல்லும் மாட்டைப் புழுதியில் படுக்க விடமாட்டார்கள்.

நானும் உடை நலங்காமல் ஒரு வேலையும் செய்யாமல் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தேன் இல்லை — அவ்வாறு கட்டாயப் படுத்தப் பட்டேன்.

மாலையாகியும் விலைபோகா மாட்டினிடமிருந்து, மணி, சதங்கை இவைகளைக் கழற்றி வைப்பார்கள்.

நான் அன்று அலங்காரம் செய்து கொண்டு காத்திருந்தது தான் மிச்சம். வேனிலும் வரவில்லை. தென்றலும் வரவில்லை. மாட்டின் நிலையைப் போல நானும் உடை, அணி இவைகளைக் களைந்து, வேறு உடையணிந்து கொண்டேன். நீண்டுவிட்டது. மற்றவை மறு கடிதத்தில்

இளநகை.

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

# சீர்திருத்தம் வேண்டும்

நாராயணசாமி.

காலம் வியத்தகு செயல்களைச் செய்துகொண்டே போகிறது. சென்றநாளெல்லாம் சிறுவிரல்வைத் தெண்ணலாம்; நின்றநாளை யார்க்கும் சொல்லுதற் கரிது. இன்று வேண்டுவது நாளைவேண்டாதனவாக மாறும். எல்லாப்பொறுப்புக்களையும் ஏற்று நடத்தும் ஒரு திறமையுள்ள தலைமைப் பதவி இல்லெனின், ஒரு குடும்பமோ, ஊரோ, நாடோ அழிந்தொழியும். வலிமை மிக்கோர் (எவ்வகையிலும்) தத்தம் சுற்றம் மூத்தறும் வண்ணம் பல தீச்செயற்கும் பின்னிடையாது உழைப்பர். இது சாதாரண மக்கள் இயல்பு.

எளியோரை வலியோர் வாட்டாது உலகில் யாவரும் சமமுடன் வாழவேண்டின் தலைவன் ஒருவன் அவசியமாகிறது. அவன் எத்தகைய பெரியோனு யிருத்தல் வேண்டும்? அதனை 'இயேசு' நன்ருக விளக்குகிருர். "எவனொருவன் உங்களுக்குத் தொண்டனு யிருக்கின்ருனே அவனே உலகில் பெரியன்" விளக்கம் வேண்டாத விளக்கமல்லவா இது? அப்படி சேவை செய்யும் அவன் புகழ் எவ்வளவு காலம் நீடிக்கும். உண்மையில் மனப்பூர்வமாக அவன் சேவை இயற்றுகிருனு? என்பதில் சந்தேகமெழும் தற்கால உலக இயல்பன்ருே இஃது. இதைப்பற்றி மேல்நாட்டறிஞர் எச். ஜி. உட் என்பவர் விளக்கமாகக் கூறுகிருர். "ஒருமனிதன் அடைந்திருக்கிற செல்வாக்கு எத்தகையது. அதன் சுபாவமென்ன வென்பதைக் கொண்டு அவனுடைய பெருமை கவனிக்கப் படுவதில்லை. ஆனுல் அவனுடைய செல்வாக்கு எவ்வளவு காலம் நீடித்திருக்கிறது. எவ்வளவு தூரம் பெருகுகிறது என்பதைக் கொண்டுதான் அவன் பெருமை கணிக்கப் படுகிறது." இதன் உண்மையைக் காணக் கடந்தகாலத்தைச் சற்று நோக்கினுல் நன்கு விளங்கும்.

நம் கண் முன் அநேகர் வந்து மறைகின்றனர். அவர்களை நம் கருத்து எடை போட்டுக் கொண்டே சிறந்த தலைவர்களைப் பொறுக்குகின்றது. சிலர் குடும்பத்தோடு நிற்கின்றனர். சிலர் ஊரோடு நிற்கின்றனர். சிலர் தத்தம் நாட்டோடு நின்று விடுகின்றனர். இவர்கள் தனி மனிதர் முகற் கொண்டு, அரசர் குடிவரையிலும் உள்ளனர் இவர் தாம் வாழ, தம் சுற்றம் வாழ, தன் ஊர் நாடு இவைகள் வாழ வழி கோலியவராவர்.

இவர் செயல்கள் ஒரு சிலரால் போற்றப் பட்டுக், காலத்தின் கோலத்தினுல் அலங்கோலப்பட்டு விடுகின்றன. இனி எஞ்சியுள்ளவர் எத்தகைய புகழுக்கு உரியவராகின்றனர் என்று பார்க்கிறபோது அதில் பெரும் புலவர்களும் உள்ளனர். ஞானிகளும் உள்ளனர். அவர்களின் அடிப்படை எது? ஒரு சிலர் சந்தர்ப்பத்தினுலோ அசாபாவித நிகழ்ச்சியினுலோ உலகப் புகழ்க்குரியவாகின்றனர். நாகரீகம் ஏற்பட்ட காலந் தொட்டு இன்று வரை உலகில் தனி மனிதராய் எல்லோர் உள்ளத்திலும் புகுந்துள்ளனர் பலர். காலம் மாறினபோதினும், நாகரீக வளர்ச்சி, மற்ற எல்லாம் வளர்ச்சியடைந்து, பல மாண்டு பல உற்பத்தியான போதிலும் அந்த ஒரு சிலரின் புகழ் அன்றையிலிருந்து இன்றுவரை வளர்ச்சி யடைந்து வருகிறதேயொழியப் பிறழவில்லை. பழையன கழிதலும், புதியன புகுதலும் இயல்பன்ருே. ஆயினும் இவர் மாறினரில்லை.

இயேசு, முகம்மது நபி, புத்தர், வள்ளுவனு, ஷேக்ஸ்பியர் சமீபகாலப் பெரியார் காந்தியார் இவர்கள் எந்த அடிப்படையில் எழுந்த கட்டிடங்களின் தூண்கள் என்று அறிதல் வேண்டும். இவர்கள் யாரும் சமகாலத்தவரு மல்லர். ஒருவர் பின் ஒருவராக எழுந்தவர்களே. தீமைப் பெருக்கெடுத்து ஓடியபோது நாட்டைத் தீங்கு செய்யாதபடி தடுத்து அணையாக நின்றவர்கள். தீமை என்னும் நீர்ப் பெருக்கத்தை நன்னெறி யென்ற அணை கொண்டு தடுத்தனர். அந்த நன்னெறியை

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros;**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

முதல் கொண்டவர் அவர் இயல்புக்கு, வசதிக் கேற்பப் பெயரிட்டனர். பின் வழி வழியினோர் அவரவர்க்கு ஏற்றவாறு பெயர் அமைக்கலாயினர். பொதுவாக 'நன்னெறி' என்ற கொள்கையினை மதம் என்று பின்வந்தோர் வசதிக் கேற்ப அமைத்துக் கொண்டனர். நாமும் அம் முறையைக் கடைப் பிடித்து வாழவே அவரவர்கள் கூறியதைப் பின்பற்றினோம். யாவரும் அந்தக் கொள்கையினையே பின்பற்றுகிறோம். இதுவே மதம். இவர்கள் யாவரும், இந்த மதம் என்ற அடிப்படையினின்று எழுந்த கட்டிடத்தின் உறுதியுடைய தூண்களே. ஆகவே நாம் யாவரும் மதம் என்ற கட்டிடத்தில் தஞ்சம் புகுந்து உறவாடுகின்றோம். அப்பொழுது நம்முன் சமயம், மொழி, மற்றெந்த பேதமுமின்றி ஒன்றுகின்றோம். தேசமும் இதில் கலவாது நிற்கிறது. "என்னுடைய தேசபக்தி என் மதத்திற்குக் கீழ்ப்பட்டது தான்" என்கிறார் காந்தியார். இதனால் மதம் எவ்வளவு அவசியமாகிறது. மதத்தால், மொழிப் பித்தோ, நாட்டுப் பித்தோ மற்ற எந்தப் பிளவுகளோ இன்றி உலக உயிரெலாம் ஒற்றுமை வாழ்க்கையைக் கையாள்வதைத்தானே விரும்புகிறோம். அந்த மனப்பான்மையுடையவர்கள் மதத்தினைப் புறக்கணிப்பார்களா? புறக்கணித்து வாழவும் முடியுமா இனி அந்த மதத்தின் கொள்கை என்ன?

சிறந்த அனுபவஞானியான டால்ஸ்டாய் 'அன்பு' என்னும் ஊன்றினைக் கையாண்டவர். அன்பு எதையும் ஆட்கொள்ளும். அவர் அந்த அன்பைப் பூரணமாக அறிந்தார். (பூரணமாக அறிந்தாரென்றால் தம்மைத்தாம் தெரிந்து கொண்டு வீடுபேறு பெற்றார்)

மனம், மொழி, மெய் இவை மூன்றும் சேர்ந்து இயங்கும் அன்பே உண்மை. இவை மூன்றும் ஒரு வழியில் இயங்கும் அன்பினிடம் சத்தியம், அகிம்சை இவை விடமுடியாத தொடர்பு கொண்டு நிற்கின்றன. சத்தியம் என்பது 'சத்' என்னும் சொல்லினடியாகப் பிறந்தது. 'சத்' என்றால் 'உள்ளது' என்பது பொருள். சத்தியம் உள்ள இடம் ஞானத்தின் இருப்பிடம். ஞானம் உள்ள இடத்தில் ஆனந்தம் இருக்கிறது. அவ்வுண்மையான ஆனந்தத்தை அனுபவிக்க அன்பு வேண்டும்.

உலக வாழ்வில் ஒன்றி இன்ப துன்பங்களை நுகர்ந்து வாழ்க்கைப் படகினைச் சரியான முறையில் கொண்டு சேர்த்தலே மனிதப் பிறவியின் நோக்கம். இயற்றப்படும் ஒவ்வொரு செயலும் மனிதனின் சீரிய வளர்ச்சிக்கு மட்டுமின்றி உலக வளர்ச்சிக்குப் படியாகவும் அமைதல் வேண்டும்.

மனிதன் வாழ்வில் இம்சையே அதிகமுடையவனாகவும், அதன் மத்தியிலேயே உலவுபவனுமாகிறான். ஒருவன் அகிம்சையை எவ்வளவு தூரம் அப்பியசிக்கின்றானோ, அவ்வளவு தூரம் அவன் மானிட சாதியை ஒழுங்குபடுத்தியவனாகிறான். மனித சுபாவமும் இம்சையன்று. அகிம்சை என்ற வாசகத்தினை உன்னியோர்தல் வேண்டும்.

இவ்வுண்மைக் கொள்கையே தூயமதத்தின் கோட்பாடு. இதுவே யாவரையும், பிளவினின்றும் நீக்குவது. இதுவே உலக மதம். இதுவே யாவரையும் சமநிலையில் வைத்துக் காப்பது. உலகப் பொதுவான இந் நீதியின் கீழ் மனிதன் ஒளி பெற முடியும். புதுமை மலரப் புற நாகரிக வளர்ச்சியுடன், அகத்திலேயும் நாகரிகம் வளரும். வெறும் கருவிகளின் முன்னேற்றம் நீங்கி மனிதன் முன்னேறுவான்.

துருதலக் கைத்தறிகளில்
நெய்த
**மேல் குட்டைகள்**
(டவல்கள்)

முறுக்கு நூலால் ஆனவை!
தூய்மையான சலவை!
கெட்டியான சாயம்!
அழகிய கரைகள்!
மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

அளவுகள்: 24"X48"
26"X52"
28"X54"
30"X60"

வணிகர்க்கு,
தக்க கழிவுகள் உண்டு!
துருதலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் PO.

# கச்சியப்பர் கவித்திறன்

சி. து. க.

(முன் தொடர்ச்சி)

தணிகைப் புராணத்தில், வள்ளியம்மையார் திருமணம் அமைத்திருக்கும் முறையே ஒரு தனிச்சிறப்புடையதாகும். கந்த புராணத்தில் கச்சியப்ப சிவாசாரியார் இச் செய்தியைப் பாடியிருக்கும் பகுதிக்கும் இதற்கும் மிக்க வேறுபாடு காணப்படுகின்றது. கச்சியப்ப முனிவர், பழந்தமிழ்த் திணை வகைகளும் துறைப் பாகுபாடுகளும் மிக்கு விளங்கும் கோவையிலக்கிய மரபில் இத் திருமண நிகழ்ச்சியைப் பாடியிருக்கிறார். தணிகைப் புராணத்தில் களவுப் படலத்துள் இச்சிறப்பினைக் காணலாகும். 'கோவை' இலக்கியத்தில் வருவது போல இப் படலத்தினும் பாங்கன், பாங்கி, செவிலி, பாணன் இன்ன பிற உறுப்பினரும் இடம் பெற்றுள்ளனர், இப் படலத்தினுள் ஒரு சில செய்யுட்களை உற்று நோக்கலாம்.

குறவர் கோமகனால் கண்டெடுத்து வளர்க்கப்பட்ட வள்ளியம்மை, பருவமுற்ற பின்னர்க் குலமரபை யொட்டித் தினைப்புனக் காவல் மேற்கொண்டனள். ஒரு நாள் அவள், உள்ளும் புறமும் ஒத்த உயிர்த் தோழியர் பலருடன் தினைப் புனத்துக் கயலிருக்கும் ஒரு பசுமரக் காவில் புகுந்து விளையாட்டயர்ந்தாள். இந் நிகழ்ச்சியைக் கூறும் செய்யுட்கள் களவியலுரையின் நடை யழகையும் பொருளையும் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டுகின்றன.

வெள்ளம்பல வென்னுமி
ஞர்குழுவும்
உள்ளம்புற மென்னவொ
ருக்கியிடை
வில்லும்பரி சில்விழை
பாங்கியுஞ் சூழ்
கொள்ளும்படி கூர்பொழில்
நண்ணினளால்

குயிலோடெதிர் கூவுது
மென்று மணி
மயிலோடுமா ருடுது
மென்றும் வரைப்
பயினீர்ச்சுனை பாய்குது
மென்று நெடுங்
கயிறம்மனை கைக்கொளுவா
மெனவும்

ஒளித்தார்தமை நேடியும்
உப்புறனில்
விளித்தார்தமை நேடியும்
வெற்பெதிர்கூஉய்க்
களித்தார்தரு காதன்
மதித்தும்இவ்வா(று)
அளித்தேங்குழ லாரகல்
வுற்றனரே

பழுகுற்ற தளிர்ப்பொழி
லும்பலகான்
விழைவுற்றத வப்பய
னும்விரவ
அழகுக்கழ காக்கும்
அணங்கனையாள்
சுழல்வண்டலர் கொய்துசு
லாவுறுவாள்

மந்தார மணங்கமழ்
சூழலிடை
நந்தாவொளி நாறுப
ளிக்கரையின்
முந்தாடிய தோகையின்
மூரிடைத்(து)
அந்தாமரை வாள்விழி
யாக்கினளே

இப்பாடல்களின் கருத்தின் பொலிவு கீழ் வரும் இறையனாரகப்பொருளில் காணப்படுதல் காண்க:

'............ என்னை பிரியுமாறென்னின் ஒன்றொருவரின் முன்னம் தழை வழை தககன தொடுத்து மென்றும், கண்ணி தண்ணறு நாற்றத்தன செய்து மென்றும், போது பேதககன கொய்து மென்றும், மயிலோடு மாறுடுது மென்றும், குயிலோடு மாறு கூவு மென்றும், அருவியாடி அஞ்சுனை குடைது மென்றும், வாச மலர்க் கொடியின் ஊசலாடுதும் என்றும் பரந்து, அப்பாலுள்ளார் இப்பாலுள்ளார் கொல்லோ வென்றும், இப்பாலுள்ளார் அப்பாலுள்ளார் கொல்லோ வென்றும இவ்வகை நினைத்துப் பிரிபவென்பது........ ........தனியவரை முனிவு செய்யும் பொழிவது நடுவண்............... தண்டாது தவிசு படப்போர்த்ததோர் பளிக்குப் பாறை மணித்தலத்து மிசை, நீல ஆலவட்டம் விரித்தாற் போலத் தன் கோலக் கலாவம் கொள விரித்து, முளையிள ஞாயிற்று இளவெயில் எறிப்ப ஓர் இளமயில ஆடுவது நோக்கி நின்றாள்'........

(இறையனார் அகப்பொருள் உ.வது சூத்திர வுரை)

இங்ஙனம் படலத் தொடக்கத்தில், வள்ளியம்மையார் பூம்பொழில் நடுவண் நிற்கும் நிலையைக் கூறிய பின், ஆடவர்க்கும் ஆசை மூட்டும்' வேட்டுவ குமரன் உருவில் தனித்து அவண் வந்த முருகவேள் அவளைக் கண்டு காதல் கூர்ந்த நிலையைக் கோவைக் கலித்துறையால் காட்சி முதலாக, மரபு வழுவா வண்ணம் கூறப் படுகிறது. (வரும்)

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; தி.சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)